RNI-N0: TNTAM/2021/83936

Postel Regd. No: TN/5/SVA/2023- 2025




# மாலை தந்தி

MALAI THANTHI

தமிழால் வெல்வோம்

DAILY EVENING

www.malaithanthi.in

மாலை நாளிதழ்




சிவகங்கை | மலர்-5 | இதழ்- 230 | ஆகஸ்டு 25, 2026 செவ்வாய்கிழமை | malaithanthi2020@gmail.com | 4 பக்கங்கள் | விலை ரூ. 5

# மகளிர் கட்டணமில்லா பயணம் 'வெற்றிப் பயணம்' என்ற பெயரில் விரிவாக்கம்; அக்.2-ல் அமல் - முதல்வர் விஜய் அறிவிப்பு

சென்னை: ஆக.25-

மகளிர் கட்டணமில்லா பயண திட்டம் வரும் அக்.2 முதல் 'வெற்றிப் பயணம்' என்ற பெயரில் விரிவாக்கம் செய்யப்படுவதாக சட்டப்பேரவையில் முதல்வர் விஜய் அறிவித்தார்.

தமிழக சட்டப்பேரவை (ஆக.24 - திங்கட்கிழமை) கூடியது. இதில் பேரவையின் 110 விதியின் கீழ் மூன்று முக்கிய அறிவிப்புகளை முதல் விஜய் அறிவித்தார்.

குடும்பத் தலைவிகள் பயன்பெறும் வகையில் 'அன்னபூரணி சூப்பர் சிக்ஸ்' திட்டத்தின் கீழ் முதற்கட்டமாக ஆண்டுக்கு மூன்று சிலிண்டர்கள் விலையின்றி வழங்கப்படும் என்றும், பரந்தூர் விமான நிலைய திட்டம் கைவிடப்படும் என்றும் முதல்வர் விஜய் அறிவித்தார்.

மகளிர் கட்டணமில்லா பயணம் விரிவாக்கம்

"ஒரு மாநிலத்தின் உண்மையான முன்னேற்றம் என்பது அதன் பொருளாதார வளர்ச்சியால் மட்டுமல்ல, பெண் கல்வி, வேலைவாய்ப்பு, மருத்துவம், வணிகம் மற்றும் சமூக வாழ்வின் அனைத்துத் தளங்களிலும் சுதந்திரமாகவும், பாதுகாப்பாகவும் பங்கேற்கும் வாய்ப்புகளாலும் அளவிடப்படுகிறது. மகளிரின் பயணச் சுதந்திரம், அவர்களின் பொருளாதாரச் சுதந்திரத்திற்கும் குடும்பங்களின் முன்னேற்றத்திற்கும் அடித்தளமாக இருக்கிறது.

தற்போது செயல்படுத்தப்பட்டு வரும் மகளிர் கட்டணமில்லாப் பயணத் திட்டத்தில் மாநகரம், நகர்ப்புறங்களில் சாதாரண மற்றும் மலைப்பகுதிப் பேருந்துகளில் 40 கி.மீ. வரை மட்டுமே பயணம் செய்ய அனுமதிக்கப்பட்டு வருகிறது. எக்ஸ்பிரஸ், எல்எஸ்எஸ், டீலக்ஸ் பேருந்துகள் மற்றும் புறநகர்ப் பேருந்துகளில் கட்டணமில்லாப் பயணம் அனுமதிக்கப்படுவதில்லை.

தமிழ்நாட்டின் எந்தப் பகுதியிலும் வசிக்கும் ஒரு மகளிரும் போக்குவரத்துக் கட்டணத்தால் தமது வாய்ப்புகளை இழக்கக்கூடாது என்ற சமூகநீதிச் சிந்தனையை இவ்வரசு முதன்மையாகக் கொண்டுள்ளது.



இதனைக் கருத்தில் கொண்டு, மகளிர் கட்டணமில்லாப் பயணத் திட்டத்தை விரிவுபடுத்தி, பெருமளவில் பயனளித்திடும் விதமாக, 'வெற்றிப் பயணம்' என்ற பெயரில், தேசத்தந்தை மகாத்மா காந்தியடிகள் பிறந்த நாளான அக்டோபர் 2-ம் தேதி முதல் செயல்படுத்த அரசு முடிவு செய்துள்ளது என்பதை இந்த மாமன்றத்தில் மகிழ்ச்சியுடன் அறிவிக்கிறேன்.

அதன்படி, முதல் கட்டமாக மாநகரம், நகரங்களில் சாதாரணப் பேருந்துகள் மட்டுமின்றி மாநகரம், நகர்ப்பகுதிகளில் இயங்கும் எக்ஸ்பிரஸ், எல்எஸ்எஸ், டீலக்ஸ் அரசுப் பேருந்துகளிலும், மகளிர் கட்டணமில்லாப் பயணங்கள் மேற்கொள்ளலாம்.

மேலும் கூடுதலாக, மாவட்டங்களுக்கிடையே பயணம் மேற்கொள்ள ஏதுவாக புறநகர் மற்றும் மலைப்பகுதிகளில், சாதாரணக் கட்டணப் பேருந்துகளிலும், மகளிர் கட்டணமில்லாப் பயணங்கள் மேற்கொள்ளலாம்.

இத்திட்டத்தில் பயன்பெற, வருமான உச்சவரம்போ மற்றும் மேற்கொள்ள விரும்பும் பயண எண்ணிக்கையிலோ கட்டுப்பாடுகள் இல்லை. 'வெற்றிப் பயணத் திட்டம்', இதர சேவைகளிலும் படிப்படியாக விரிவுபடுத்தப்படும்.

இதன்மூலம், மாநிலம் முழுவதும் மகளிருக்கான எளிதில் அணுகக்கூடிய பொதுப் போக்குவரத்து வசதி பெருமளவில் கிடைக்கும். இதன்மூலம் மாணவிகள் தொலைதூரத்தில் உள்ள கல்லூரிகளுக்குச் செல்லவும், பணியிடங்களுக்குச் செல்லவும், மருத்துவம் மற்றும் அத்தியாவசியச் சேவைகளுக்கும் கட்டணமின்றி பேருந்துகளில் பயணிக்க இயலும்.

வெற்றிப் பயணம் என்பது கட்டணமில்லா ஒரு பேருந்துப் பயணம் மட்டுமல்ல, ஒரு மாணவியின் கல்வி, ஒரு தொழிலாளியின் வேலைவாய்ப்பு, ஒரு தாயின் குடும்பப் பொறுப்பு, ஒரு தொழில்முனைவோரின் முன்னேற்றம் போன்றவற்றை உறுதிசெய்யும் சமூக முதலீடாகும். தமிழ்நாட்டின் எந்தப் பகுதியில் வாழ்ந்தாலும், மகளிரின் இயக்கச் சுதந்திரத்திற்கும் பொருளாதார முன்னேற்றத்திற்கும் அரசு உறுதுணையாக இருக்கும்.

இத்திட்டத்தின்கீழ் திருநரும் கட்டணமில்லாப் பயணங்கள் மேற்கொள்ளலாம்

'வெற்றிப் பயணம்' வழியாக மகளிரின் வாய்ப்புகள் விரிவடைந்து, குடும்பங்கள் முன்னேறி, சமூகநீதியும் சமத்துவமும் நிலைபெற்று, வளமான வெற்றித் தமிழ்நாட்டை உருவாக்கும் நமது பயணம் மேலும் வலுப்பெறும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இத்திட்டத்தைச் செயல்படுத்துவதன்மூலம் ஆண்டுதோறும் தோராயமாக 6000 கோடி ரூபாய் செலவினம் ஏற்படும்" என்று முதல்வர் விஜய் அறிவித்தார்.

# "திருப்புகழ் கமிட்டி அறிக்கையை பேரவையில் சமர்ப்பிக்காதது ஏன்?" - கே.என்.நேரு விளக்கம்

சென்னை: ஆக.25-

"திருப்புகழ் கமிட்டி அறிக்கையில் உள்ள அனைத்து பரிந்துரைகள் மீதும் நடவடிக்கைகள் எடுத்து, குறிப்புகளை இப்பேரவையில் வைக்க வேண்டும் என்று பணிகளை மேற்கொண்டிருந்த சமயத்தில் தேர்தல் வந்துவிட்டதால் சமர்ப்பிக்க முடியவில்லை" என திமுக முன்னாள் அமைச்சர் கே.என்.நேரு தெரிவித்தார்.

சட்டப்பேரவையில் இன்று பேசிய முன்னாள் அமைச்சர் கே.என்.நேரு, "சென்னை வெள்ளத் தடுப்பு பணிகளுக்காக அமைக்கப்பட்ட ஓய்வுபெற்ற ஐஏஎஸ் அதிகாரி திருப்புகழ் கமிட்டி அறிக்கையை ஏன் பேரவையில் வைக்கவில்லை என சவுமியா அன்புமணி கேள்வி எழுப்பியிருந்தார்.

திருப்புகழ் தலைமையில் அமைக்கப்பட்ட கமிட்டி 2022-ம் ஆண்டு ஜனவரி 31 அன்று இடைக்கால அறிக்கை தந்தது. 2023 மார்ச் 14 அன்று இறுதி அறிக்கையை தந்தது. அப்போது



தலைமைச்செயலாளராக இருந்த இறையன்பு, முதல்வராக இருந்த ஸ்டாலின் உள்ளிட்டோர் முன்னிலையில் அந்த அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டது.

அந்த அறிக்கையில், அவசர கால தீர்வு, நீண்ட கால தீர்வு என பரிந்துரைகள் வழங்கப்பட்டிருந்தது. அதனை தொடர்ந்து அவசர கால பணிகளை உடனடியாக மேற்கொள்ள அப்போதைய முதல்வர் உத்தரவிட்டார். சென்னை வெள்ளத் தடுப்பு பணிகள் என்ற அடிப்படையில் புதிய மழைநீர் வடிகால்கள் அமைக்கும் பணிகள் உள்ளிட்ட திருப்புகழ் கமிட்டி அளித்த 161 இலக்குகள் மீதான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு பணிகள் நிறைவேற்றப்பட்டன.

திருப்புகழ் கமிட்டி அறிக்கையில் உள்ள அனைத்து பரிந்துரைகள் மீதும் நடவடிக்கைகள் எடுத்து, குறிப்புகளை இப்பேரவையில் வைக்க வேண்டும் என்று பணிகளை மேற்கொண்டிருந்த சமயத்தில் தேர்தல் வந்துவிட்டதால் சமர்ப்பிக்க முடியவில்லை. இப்போது நீங்கள் ஆட்சிக்கு வந்துவிட்டீர்கள், அந்த கமிட்டியின் அறிக்கையை தாராளமாக பேரவையில் சமர்ப்பியுங்கள். மீதமுள்ள பரிந்துரைகளை நீங்கள் முழுவதுமாக நிறைவேற்றுங்கள். நாங்கள் ஒத்துழைப்பு தருகிறோம்." என்றார்.

# "தமிழகத்தில் பாதுகாப்பற்ற ஹிட்லர் ஆட்சி நடக்கிறது" - தினகரன் தாக்கு

தஞ்சாவூர்: ஆக.25-

தஞ்சாவூரில் செய்தியாளர்களிடம் பேசிய தினகரன், "பரந்தூர் விமான நிலைய திட்டத்தை தமிழக அரசு கைவிட்டதை வரவேற்கிறேன். அதே நேரத்தில் மாற்றுத் திட்டத்தை கொண்டுவர அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும். தன்னை வளர்த்து ஆளாக்கிய இயக்கமான அதிமுக அழிந்து போகும் என செங்கோட்டையன் கூறியிருப்பது, அந்த இயக்கத்தின் மீது வன்மம் கொண்ட மனிதராக இருக்கிறார் என்பதை உணர்த்துகிறது.

தமிழக முதல்வர் விஜய் சட்டப்பேரவையில் பேசும்போது, "மூன்று ஃபைல்களை நான் ஒபன் செய்ய வேண்டியிருக்கும்," என மிரட்டும் தொணியில் பேசுவது கண்டிக்கதக்கது. யார் குற்றம் செய்திருந்தாலும் தவறுதான். எனவே அந்த கோப்புகளை பார்த்து நடவடிக்கை எடுக்க வேண்டும். இதற்கெல்லாம் திராவிட கட்சிகள் பயந்து விடாது. முதல்வர் 'தூய சக்தி' என்று சினிமா டைலாக் பேசி அரசியலுக்கு வந்தார். அவர் என்ன சுதந்திர போராட்ட தியாகியா. சிறந்த அரசியல் வில்லன் நடிகர் விஜய். அவருக்கு பாரத ரத்னா விருது கொடுக்கலாம்.

6 சிலிண்டர்கள் தருவதாக கூறி மூன்று சிலிண்டர் தருகிறார். அதில் எதற்கு வருமான வரம்பு வைக்க வேண்டும். தமிழகத்தில் படித்து விட்டு இளைஞர்கள் வேலை இல்லாமல் பலர் உள்ளனர். ஆனால் நடத்துநர், ஓட்டுநர் பதவிக்கு வெளி மாநில சேர்ந்தவர்களை நியமிக்கிறார்கள். தங்க மோதிரம் திட்டத்துக்கு கேரள மாநிலத்தைச் சேர்ந்த நகைக் கடைக்கு டெண்டர் கொடுக்கப்பட்டுள்ளது. பெயர் தான் தமிழக வெற்றிக் கழகம், செய்வது எல்லாம் வேறு வேலையாக தான் இருக்கிறது.

திராவிட ஆட்சியில் ஊழல் குற்றச்சாட்டு இருக்கலாம், ஆனால் வளரந்த மாநிலத்தில் தமிழகம் முதல் இடத்தில் இருந்தது. தற்போது அதள பாதாளத்தில் தமிழகம் செல்கிறது. தவெக ஆட்சியில் தமிழகத்தில் யாருக்கும் பாதுகாப்பு இல்லை, ஹிட்லர் ஆட்சி போல் சென்று கொண்டிருக்கிறது. வரும் உள்ளாட்சி தேர்தலை தேசிய ஜனநாயக கூட்டணியோடு சந்திப்போம்" என்று அவர் கூறினார்.

# "தமிழகத்தில் ஏற்பட்ட 'மாற்றம்' ஏமாற்றமாக மாறியிருக்கிறது" - மு.க.ஸ்டாலின் பேச்சு

சென்னை: ஆக.25-

"வீட்டிற்கு வீடு பட்டதாரிகளும் மருத்துவர்களும் இருக்கிறார்கள் என்றால் அதற்குக் காரணம் திராவிட இயக்கம். தமிழகத்தில் ஒரு மாற்றம் ஏற்பட்டு, அது ஏமாற்றமாக மாறியிருக்கிறது. லட்சக்கணக்கான மக்கள் செய்த தவறு, கோடிக்கணக்கான மக்களை இன்றைக்குத் துன்புறுத்திக் கொண்டிருக்கிறது. இந்த நிலை மாற வேண்டும்" என்று திமுக தலைவர் மு.க.ஸ்டாலின் தெரிவித்தார்.

சென்னையில் இன்று நடைபெற்ற அமிர்தம் இல்லத் திருமண விழாவில் கலந்துகொண்டு உரையாற்றிய திமுக தலைவர் மு.க.ஸ்டாலின், "அரை நூற்றாண்டுக்கு முன்னால் பார்த்தால், அத்தி பூத்தாற்போலதான் ஒரு டாக்டரோ அல்லது பட்டதாரியோ இருப்பார்கள். ஆனால் இன்றைக்கு ஊருக்கு ஊர், கிராமத்திற்கு கிராமம், வீட்டிற்கு வீடு பட்டதாரிகளும் மருத்துவர்களும் இருக்கிறார்கள் என்று சொன்னால்,



அதற்குக்காரணம் 'திராவிட இயக்கம்' என்பதை யாரும் மறந்துவிடக் கூடாது.

அப்படிப்பட்ட திராவிட இயக்கத்தின் வழித்தோன்றலாக, திராவிட முன்னேற்றக் கழகப் பரம்பரைக் குடும்பத்தில் நடைபெறும் திருமணமாக இந்தத் திருமணம் நடந்து கொண்டிருக்கிறது. ஆனால் இந்த நிலை வருவதற்கு யார் காரணமாக இருந்தார்கள் என்பதை இன்றைக்கு இருக்கக்கூடிய இளைஞர்கள் புரிந்து கொள்ள வேண்டும்; தெரிந்து கொள்ள வேண்டும். அவர்களுக்குப் புரியவில்லை, தெரியவில்லை. அதனால்தான் ராசா சொன்னதுபோன்று, ஒரு மாற்றம் தமிழ்நாட்டில் ஏற்பட்டு, அது ஏமாற்றமாக மாறியிருக்கிறது. லட்சக்கணக்கான மக்கள் செய்த தவறு, கோடிக்கணக்கான மக்களை இன்றைக்குத் துன்புறுத்திக் கொண்டிருக்கிறது. இந்த நிலை மாற வேண்டும்.

எனவே, இந்த நிலை மாறுவதற்கு இந்த மணவிழாவில் கலந்துகொண்டிருக்கக்கூடிய நீங்கள் வரக்கூடிய காலகட்டங்களில் சிறப்பான வகையிலே சிந்தித்துப் பார்த்துச் செயல்பட வேண்டும் என்று உங்களை அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

இன்றைக்கு இலக்கியாவாக இருந்தாலும் சரி, டாக்டர் கிரிதராவாக இருந்தாலும் சரி, நான் அதிகமாக அறிவுரை சொல்ல வேண்டிய அவசியம் இல்லை. உங்களுக்கு நான் வைக்கக்கூடிய ஒரே வேண்டுகோள்: நீங்கள் பெற்றெடுக்கக்கூடிய குழந்தைகளுக்கு அழகான தமிழ்ப் பெயர்களைச் சூட்டுங்கள்.

இந்த மணவிழாவில் மணமக்களை நான் அன்போடு கேட்டுக்கொள்வது, குழந்தைகளுக்கு அழகான தமிழ் பெயர்களைச் சூட்டுங்கள் என்று அன்போடு கேட்டு, பாரதிதாசன் எடுத்துச் சொல்லியிருக்கக்கூடிய 'வீட்டிற்கு விளக்காக, நாட்டிற்குத் தொண்டர்களாக' மணமக்கள் வாழ்க, வாழ்க, வாழ்க என வாழ்த்தி விடைபெறுகிறேன்" எனத் தெரிவித்தார்.

# "முதல்வர் விஜய்யை வருங்கால பிரதமர் என அமைச்சர்கள் பேசுவது தேவையற்றது" - காங். எம்.பி. கிறிஸ்டோபர் திலக்

திருச்சி: ஆக.25-

அகில இந்திய காங்கிரஸ் கட்சியின் செயலாளரும், எம்.பி.யுமான கிறிஸ்டோபர் திலக் திருச்சியில் நேற்று செய்தியாளர்களிடம் கூறியது: நாடாளுமன்ற மழைக்கால கூட்டத்தொடரில் பல்வேறு விவகாரங்கள் குறித்து உரிய விவாதம் நடைபெறவில்லை.

இதுகுறித்து பதிலளிக்க தைரியம் இல்லாததால் பிரதமர் மோடி, மத்திய உள்துறை அமைச்சர் அமித்ஷா ஆகியோர் நாடாளுமன்றத்துக்கு வரவில்லை.

பெண்கள் மீதான அடக்குமுறைகள் குறித்த



உண்மையான நிலவரத்தை எடுத்துரைக்கும் வகையிலேயே ராகுல் காந்தி மனுஸ்மிருதியை சுட்டிக்காட்டி பேசினார்.

அதை இந்து மதத்துக்கு எதிரான கருத்தாக பாஜக திரித்துள்ளது அரசியல் உள்நோக்கம் கொண்டது. தமிழக சட்டப்பேரவையில் ஆளுங்கட்சி, எதிர்க்கட்சியினர் இடையே தரம் தாழ்ந்த விவாதங்கள் நடைபெறுவது வருத்தம் அளிக்கிறது.

தொகுதி மறுவரையறை தொடர்பாக தனது நிலைப்பாடு குறித்து தமிழக அரசு தெளிவான விளக்கத்தை அளிக்க வேண்டும்.

பொதுமக்கள் நலன் சார்ந்த பிரச்சினைகளை கூட்டணி கட்சிகள் முன்வைக்கும்போது, அவற்றை உடனடியாக கவனத்தில் கொண்டு உரிய விளக்கம் அளிப்பது அரசுக்கு நல்லது.

தங்கள் கட்சித் தலைவரை மகிழ்விப்பதற்காக முதல்வர் விஜய்யை வருங்கால பிரதமர் என அமைச்சர்கள் பேசுவது தேவையற்றது.

தமிழகத்தில் வேலைவாய்ப்பின்மை, போதைப் பொருள் புழக்கம், மின்சார தட்டுப்பாடு உள்ளிட்ட பல்வேறு முக்கிய பிரச்சினைகளை தீர்ப்பதிலும், மாநிலத்தின் வளர்ச்சியிலும் அரசு கவனம் செலுத்த வேண்டும். இவ்வாறு அவர் தெரிவித்தார்.

**present sale for all over Tamil Nadu**

**தற்பொழுது தமிழகமெங்கும் விற்பனையாகி வருகிறது**




# நாட்றம்பள்ளி பேரூராட்சியில் த.வெ.க., 100 நாள் சாதனை விளக்க மாபெரும் பொதுக்கூட்டம்

## வனத்துறை அமைச்சர் ரஞ்சித் குமார் பங்கேற்பு!

நாட்றம்பள்ளி, ஆக.25- திருப்பத்தூர் மாவட்டம் ஜோலார்பேட்டை சட்டமன்ற தொகுதி நாட்றம்பள்ளி பேரூராட்சி பேருந்து நிலையத்தில் ஆகஸ்ட் 22 அன்று மாலை 6 மணி அளவில் தமிழக வெற்றி கழகம் 100 நாள் சாதனை விளக்க மாபெரும் பொதுக்கூட்டம் நாட்றம்பள்ளி பேரூர் கழக செயலாளர் சிலம்பரசன் (எ) ஹரி தலைமையிலும், திருப்பத்தூர் மேற்கு மாவட்ட கழக செயலாளர் V. C.முனிசாமி முன்னிலையில் நடைபெற்றது. இந்நிகழ்ச்சிக்கு சிறப்பு அழைப்பாளராக தமிழக வனத்துறை அமைச்சரும் திருப்பத்தூர் மாவட்ட பொறுப்பு அமைச்சருமான R.V.ரஞ்சித்குமார் கலந்துகொண்டு தமிழக வெற்றிக்கழகம் ஆட்சி அமைத்து 100 நாள் செய்த சாதனை குறித்து பல்வேறு திட்டங்கள் குறித்து பேருரை ஆற்றினார்கள். உடன் மாவட்ட மகளிர் அணி அமைப்பாளர் டாக்டர் ரோகினி, மாவட்ட கொள்கை பரப்புச் செயலாளர் ஜெகன், ஜோலார்பேட்டை கிழக்கு ஒன்றிய செயலாளர் பிரகாசம், ஜோலார்பேட்டை நகர செயலாளர் ஜீவா, ஜோலார்பேட்டை மத்திய ஒன்றிய கழக செயலாளர் நந்தியப்பன், கந்திலி மேற்கு ஒன்றிய செயலாளர் சதீஷ்குமார், பூபதி, மற்றும் தமிழக பொறுப்பாளர்கள் வெற்றிக்கழகம் செயற்குழு உறுப்பினர்கள் மற்றும் பலர் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

# சட்டமன்றக் கூட்டத் தொடரானது ஒரு பட்டிமன்றம் போல் மாறிவிட்டதாகவும், ஆளும் கட்சியை சார்ந்த தலைவர்கள், எதிர்க்கட்சியினரை பார்த்து ஒருவரையொருவர் மாற்றி மாற்றி குறை கூறுவதிலும் தான் மும்முரமாக இருப்பதாக விஜய பிரபாகரன் விமர்சனம் செய்துள்ளார்

அனகாபுத்தூர், ஆக.25- செங்கல்பட்டு மாவட்டம் பல்லாவரத்தை அடுத்த அனகாபுத்தூர் பகுதியில், மறைந்த கேப்டன் விஜயகாந்த்தின் பிறந்தநாளை முன்னிட்டு 10 மற்றும் 12 ஆம் வகுப்புகளில் அதிக மதிப்பெண் பெற்ற மாணவ-மாணவிகளுக்கு ஊக்கத்தொகை வழங்கும் விழா செங்கல்பட்டு மாவட்ட செயலாளர் அனகை முருகேசன் தலைமையில் அனகாபுத்தூர் பகுதி கழகச் செயலாளர் மகாதேவன் முன்னிலையில் நடைபெற்றது. இதில் ஏராளமான தேமுதிக தொண்டர்களும் மாணவ ர்களும் கலந்து கொண்டனர் இவ்விழாவில், தேமுதிக மாநில இளைஞரணி செயலாளர் விஜய பிரபாகரன் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டு சிறப்புரை யாற்றினார்.




அப்போது மேடையில் பேசிய அவர், தேமுதிக என்பது பணக்காரர்கள் சேர்ந்து ஆரம்பித்த கட்சி அல்ல என்றும், ஏழைத் தொழிலாளிகள், விவசாயிகள் மற்றும் கூலித் தொழிலாளிகளுக்காக உருவாக்கப்பட்ட கட்சி என்றும் தெரிவித்தார். கடந்த 20 ஆண்டுகளாக இக்கட்சிக்காக தாங்கள் போராடி வந்தாலும், இன்றளவும் பொதுமக்களிடமிருந்து தமக்குரிய சரியான அங்கீகாரம் கிடைக்க வில்லை என்பது மிகுந்த வருத்தத்தை ஏற்படுத்துவதாகக் கூறினார். மேலும், பொதுமக்கள் மாற்றத்தை நோக்கியே வாக்களித்திருந்தாலும், தற்போதைய சூழலில் அவர்களுக்கு ஏமாற்றமே மிஞ்சியுள்ளதாகவும், தற்போதைய ஆளும் கட்சிக்கு ஆரம்பத்தில் அடித்தளம் அமைத்துக் கொடுத்தவர் கேப்டன் விஜயகாந்த்தான் என்ற உண்மையை யாராலும் மாற்ற முடியாது என்றும் குறிப்பிட்டார்.

தொடர்ந்து பேசிய அவர், கடந்த தேர்தலின் போது தாங்கள் விலை உயர்ந்த கார் வாங்கியதாகப் பொய் கூறப்பட்டதாகக் குற்றம் சாட்டியதுடன், சட்டமன்ற உறுப்பினர்கள் தேர்தல் பிரமாணப் பத்திரத்தில் தங்களிடம் கார் உள்ளது என்று தெளிவாகக் குறிப்பிட்ட விவரங்கள் இருக்க, தற்போது கார் இல்லை ஆட்டோவில் வருகிறோம் என்று கூறுவது முரணாக உள்ளதாகவும், இங்கு உண்மைக்கு இடம் இல்லை என்றும் தெரிவித்தார்.

மேலும், மறைமுகமாக ஆளும் கட்சியினர் பாஜகவிற்கு ஆதரவு தெரிவித்து வருவதாகக் கூறிய அவர், தற்போதைய சட்டமன்றக் கூட்டத் தொடரானது ஒரு பட்டிமன்றம் போல மாறிவிட்டதாகவும், தலைவர்கள் ஒருவரை யொருவர் மாற்றி மாற்றி குறை கூறுவதிலும் வாழ்த்துத் தெரிவிப்பதிலும் மட்டுமே காலம் கழிப்பதாகவும் கடுமையாக விமர்சித்தார்.

எனக்கு உங்கள் மீது எந்தக் கோபமும் இல்லை அண்ணன் விஜய் முதல்வர் ஆன பிறகு அனைத்து கட்சித் தலைவர்களையும் நேரில் சந்தித்தார், ஆனால் பெரியார் சமாதிக்குச் செல்லத் தெரிந்த அவருக்கு கேப்டன் சமாதிக்கு ஏன் போகத் தோன்றவில்லை?என்ற கேள்வியையும் முன்வைத்தார்.

இந்த நிகழ்ச்சியில் பகுதி கழகச் செயலாளர்கள் கேட் எம்.தர்மா, மார்க்கெட் ஞானப்பால், மாவட்ட மகளிர் அணி செயலாளர் பாத்திமா ஸ்டெல்லா, ஊரப்பாக்கம் மூர்த்தி, ஒன்றிய செயலாளர் சக்திவேல், மற்றும் மாவட்ட, ஒன்றிய, பகுதி தேமுதிக கழக நிர்வாகிகள் மற்றும் பொதுமக்கள் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.





■ நீலகிரி மாவட்ட கராத்தே பயிற்சியாளர் பழனிவேல் தலைமையில் மாருதி சிட்டோ- ரியு கராத்தே பள்ளியின் துறையூர் மாணவர்களுக்கான கராத்தே திறனாய்வு தேர்வு தாத்தையங்கார் பேட்டையில் நடைபெற்றது. இத்தேர்வை மாருதி சிட்டோ- ரியு கராத்தே பள்ளியின் நிறுவனர் ரென்சி ம. பழனிவேல் சிறப்பாக நடத்தினார். இத்தேர்வுக்கான ஏற்பாடுகளை கராத்தே பயிற்சியாளர் சென்சாய் ஜெ. அருண் குமார் செய்திருந்தார். இதில் மாணவ மாணவியர்கள் பங்கேற்று திறனாய்வு தேர்வில் வெற்றி பெற்று அடுத்த பட்டைகளையும் சான்றிதழ்களையும் பெற்றனர். சான்றிதழ் பெற்ற மாணவர்களுக்கு பள்ளியின் தலைமை பயிற்சியாளர் சென்சாய் B. இணையத்துல்லா வாழ்த்துக்களையும் பாராட்டுகளையும் தெரிவித்தார்.



■ சென்னை, ஆலந்தூர் மணப்பாக்கம் இந்திரா நகரில் அமைந்துள்ள அருள்மிகு ஸ்ரீ மகா மங்கள முத்துமாரியம்மன் ஆலய ஜீர்ணோத்தாரண அஷ்டபந்தன மகா கும்பாபிஷேக விழா. ஆலய வளர்ச்சி குழு மற்றும் ஊர் பொதுமக்கள் முன்னிலையில் ஆலயத் தலைவர் முனுசாமி,செயலாளர் கருணன், பொருளாளர் பொன்னுமகன் கும்பாபிஷேகத்தைசிறப்பாக நடத்தினர்கள். சிறப்பு விருந்தினராக ஆலந்தூர் சட்டமன்ற உறுப்பினர் ஆர்.எம்.ஹரிஷ் கலந்து கொண்டு தரிசனம் செய்தார். முத்து மாரி அம்மனக்கு சாற்றிய புடவைகள் திருவிழா நடக்கும் மூன்று நாட்கள் ஏலம் விடப்படும்.மேலும் ஆலயத்திற்கு வருகை தந்த பக்த கோடிகளுக்கு அன்னதானம் வழங்கப்பட்டது.

# மஞ்சம்பாக்கம் ஓம் ஸ்ரீ எல்லையம்மன் ஆலயத்தில் 3-ம் ஆண்டு ஆடிமாத திருவிழா

மாதவரம், ஆக.25- மாதவரம் தொகுதி மஞ்சம்பாக்கம் கிராமம் காமராஜர் சாலையில் அமைந்துள்ள பிரசித்தி பெற்ற அருள்மிகு ஓம் ஸ்ரீ எல்லையம்மன் ஆலயத்தில் 3-ம் ஆண்டு ஆடிமாத திருவிழா மஞ்சம்பாக்கம் எல்லையம்மன் அறக்கட்டளை மற்றும் கிராமபொதுமக்கள் ஏற்பாட்டில் வெகு விமர்சியாக நடைபெற்றது. நிகழ்ச்சியில் கணபதி பூஜையுடன் அம்மனுக்கு பல்வேறு வாசனை திரவியங்களால் அபிஷேகம் செய்து சிறப்பு அலங்காரம் செய்யப்பட்டு மஹா தீபாராதனை காண்பிக்கப்பட்டது. பின்னர் கூழ்வார்த்தல், கும்பம் படையல்பூஜை போன்ற சிறப்பு பூஜைகள் நடைபெற்றது. இதனைத்தொடர்ந்து அம்மன் உற்சவர் வண்ணமலர்கள் மற்றும் திருஆபரணங்களால் அலங்காரம் செய்து தூபதீப ஆராதனை காண்பிக்கப்பட்டது. இதில் மஞ்சம்பாக்கம் எல்லையம்மன் அறக்கட்டளையின் அனைத்து




பொறுப்பாளர்கள், சுற்றுவட்டார பக்தர்கள் உள்ளிட்ட கிராமபொதுமக்கள் திரளாக கலந்துகொண்டு சுவாமி தரிசனம் செய்தனர்.மேலும் இவ்விழாவை முன்னிட்டு ஆலயம் சார்பில் பக்தர்களுக்கு அறுசுவை அன்னதானம் மற்றும் பிரசாதம் வழங்கினர்.

# போச்சம்பள்ளி அருகே தமிழகத்தின் 2வது யூதக் கல்வெட்டு கண்டுபிடிப்பு

கிருஷ்ணகிரி, ஆக.25- கிருஷ்ணகிரி மாவட்டம் போச்சம்பள்ளி அருகே தமிழகத்தின் 2வது யூதக் கல்வெட்டு கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

கிருஷ்ணகிரி வரலாற்று ஆய்வு மற்றும் ஆவணப்படுத்தும் சங்கம், மாவட்ட அரசு அருங்காட்சியகம் மற்றும் தமிழ்நாடு தொன்மை இயல் ஆய்வு நிறுவனம் ஆகியவை இணைந்து, கிருஷ்ணகிரி மாவட்டத்தின் பல்வேறு வரலாற்று தடயங்களை கண்டறிந்து ஆய்வு செய்து வெளியிட்டு வருகின்றனர். அதன்படி, அண்மையில் கிருஷ்ணகிரி மாவட்டம், போச்சம்பள்ளி வட்டம் ஆனந்தூரில், யூதர்கள் குறித்த அரிய கல்வெட்டினை கண்டறிந்துள்ளனர். இது குறித்து தமிழ்நாடு தொன்மை இயல் ஆய்வு நிறுவன செயலர் கோவிந்தராஜ் கூறியதாவது: அண்மை காலமாக தமிழக வரலாற்றில் முக்கியத்துவம் வாய்ந்த பல செய்திகள், கிருஷ்ணகிரி மாவட்டத்தில் இருந்து எங்கள் ஆய்வு மூலமாக வெளிவந்து கொண்டிருக்கின்றன. அவ்வகையில், தற்போது கண்டறியப்பட்டுள்ள யூதர்கள் குறித்த கல்வெட்டும் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த ஒன்றாகும். கேரள மாநிலம் கொச்சியில்



யூதர்கள் ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே குடியேறி இருந்தாலும், இதுவரை யூதர்கள் குறித்து தமிழகத்தில் ராமநாதபுரம் மாவட்டம் பெரியபட்டணத்தை அடுத்த வாலாந்தரவை என்ற ஊரில் மட்டும் ஒரு கல்வெட்டு கண்டறியப்பட்டுள்ளது. 13ம் நூற்றாண்டை சேர்ந்த இக்கல்வெட்டு சூத பள்ளியான ஐநூற்றுவன் பெரும்பள்ளிக்கு வழங்கப்பட்ட தானத்தை குறிக்கிறது. இதனை அடுத்து யூதர்களைப் பற்றிக் குறிப்பிடும் கல்வெட்டு ஆனந்தூரில் தற்போது கண்டறியப்பட்டுள்ளது.

இக்கல்வெட்டு ஆனந்தூரில் உள்ள தான்தோன்றீஸ்வரம் கோயிலை சுற்றியுள்ள புதர்களை அகற்றும் போது பொதுமக்களால் கண்டறியப்பட்டு எங்களுக்கு தகவல் அளித்து அதன் பேரில் இங்கு வந்து ஆய்வு செய்தோம். ஏற்கனவே குலோத்துங்கன் காலத்திய வணிகர்குழு கல்வெட்டு, மூன்று நடுகற்கள் ஆகியவை இக்கோவிலை சுற்றியுள்ள புதர்களில் இருந்து கண்டறியப்பட்டுள்ளன. தற்போது கிடைத்துள்ள கல்வெட்டும் வணிகக் குழு கல்வெட்டே ஆகும். சூதகர், மண்டல வணிகர், தென்னிலங்கை வளஞ்சியர், எழுநூற்றுவர் ஆகிய நான்கு வணிகக் குழுக்கள் இணைந்து, இங்குள்ள தான்தோன்றீஸ்வரமுடைய நாயனார் கோயிலில் ஒரு மண்டபத்தை கட்டிய செய்தியை இக்கல்வெட்டு தெரிவிக்கிறது. இதில் குறிப்பிடப்படும் நான்கு வணிக குழுக்களில் முதலாவது இருப்பது சூதகர் என்பதாகும். யூதர் என்பதையே இங்கு சூதகர் எனக் குறிப்பிட்டுள்ளனர்.

13ம் நூற்றாண்டை சேர்ந்த இக்கல்வெட்டில் வணிக குழுக்களில் ஒருவராக யூதர்கள் குறிக்கப்படுவது வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்ததாகும். 12 மற்றும் 13ம் நூற்றாண்டுகளில் ஐரோப்பா மற்றும் அதனை சுற்றியுள்ள பகுதிகளில் பல கட்டங்களாக சிலுவை போர்கள் நடந்தபோது, யூதர்கள் தங்கள் நிலங்களை இழந்து வெளியேற்றப்பட்டனர். அவ்வாறு வந்தவர்கள் உலகின் பல்வேறு பகுதிகளின் கடற்கரை பட்டணங்களில் கைவினைஞர்களாகவும், துணிக்கு சாயம் ஏற்றுபவர்களாகவும், வணிகர்களாகவும் வாழ்ந்தனர். இவ்வணிகர்களே வணிகக் குழுக்களாக அமைந்து பிற வணிகக் குழுக்களுடன் இணைந்து நாட்டின் உள் பகுதிகளிலும் வணிகம் மேற்கொண்டதற்கு ஆதாரமாக ஆனந்தூர் சிவன் கோயிலில் இம்மண்டபத்தை எழுப்பியுள்ளதை கூறலாம்.

தகடூரில் இருந்து நாவற்தாவளத்துக்கு செல்லும் அதியமான் பெருவழியில் இதுவரை 3 அக்கால காதக்கற்கள் கிடைத்துள்ளன. இவற்றை கொண்டு நாவற்தா வளம் எது என ஆய்வு செய்ததில், அவை ஆந்திர மாநிலம், சித்தூர் வட்டம் பூதலப்பட்டு என்பது கண்டறியப்பட்டுள்ளது. இப்பெருவழி மற்றும் அதனை ஒட்டியுள்ள ஊர்களில் இருந்து பல வணிகக்குழு கல்வெட்டுகள் கிடைத்துள்ளன. அப்பெருவழியில் அமைந்த ஊராக இந்த ஆனந்தூர் இருந்திருக்கிறது. எனவே தான் வணிகர்கள் தங்குவதற்கு ஏதுவாக இந்த நான்கு வணிகக் குழுக்களும் இணைந்து இக்கோவிலில் மண்டபத்தை கட்டியுள்ளனர் எனத் தெரிகிறது.

எனவே 10ம் நூற்றாண்டில், கேரள மாநிலம் கொச்சி பகுதியில் குடியேறியதற்கும், 17ம் நூற்றாண்டில் ஆங்கிலேயர்களோடு சென்னையில் குடியேறியதற்கும் இடைப்பட்ட சிலுவைப்போர் காலத்தில், யூதர்கள் தமிழக பகுதிக்கு வந்ததோடு வணிக குழுவாக செயல்பட்டதையும், 13ம் நூற்றாண்டை சேர்ந்த பெரியபட்டணம் மற்றும் ஆனந்தூர் கல்வெட்டுகள் தமிழக வரலாற்றுக்கு புதிய செய்தியை வழங்கியுள்ளன. இவ்வாறு அவர் கூறினார்.

இந்த ஆய்வின் போது, கிருஷ்ணகிரி வரலாற்று ஆய்வு மற்றும் ஆவணப்படுத்தும் சங்கத் தலைவர் நாராயணமூர்த்தி, செயலர் தமிழ் செல்வன், இணைச் செயலர் பாலாஜி, பொருளாளர் விஜயகுமார், ஆய்வாளர் சதாநந்தம் கிருஷ்ணகுமார், அருங்காட்சியக காப்பாட்சியர் சிவக்குமார், காட்சிக் கூடக் காவலர் செல்வகுமார், ஆனந்தூர் சரவணன், முருகா நந்தம், நாகராஜ், கார்த்தி மற்றும் பொதுமக்கள் உடனிருந்தனர்.

# சென்னை ஆலப்பாக்கத்தில் அமைந்துள்ள அருள்மிகு ஸ்ரீ கெங்கையம்மன் திருக்கோயில் அஷ்டபந்தன மஹா கும்பாபிஷேகம்

சென்னை, ஆக.25- சென்னை ஆலப்பாக்கத்தில் அமைந்துள்ள அருள்மிகு ஸ்ரீ கெங்கையம்மன் திருக்கோயில் அஷ்டபந்தன மஹா கும்பாபிஷேகம் நடைபெற்றது. ஸ்ரீ கெங்கை அம்மன் என்பவள் பாவங்களை போக்கும் புனித நதியான கங்கை நதியின் அம்சமானவள் கங்கை நதி பூமிக்கு வந்த விதம் குறித்து புராணங்களில் சொல்லப்படுவது பகீரத மன்னன் தனது முன்னோர்களின் சாபத்தை நீக்கி அவர்களின் ஆன்மா முக்தி அடைய வேண்டி ஆகாய கெங்கையை பூமிக்கு கொண்டுவர சிவபெருமானை நோக்கி கடுந்தவம் புரிந்ததால் சிவபெருமான் கெங்கையை தனது சடையில் தாங்கி பூமியில் பாயச் செய்தார்.பூமியை வந்தடைந்த கங்காதேவி மக்களின் பாவங்களை எல்லாம் தண்ணீரில் கரைத்து புனிதம் அடைய செய்தாள். அது முதற்கொண்டு மக்களின் சாபங்களை நீக்கும் ஸ்ரீ கெங்கை அம்மனாக மக்கள் வழிபட தொடங்கினர். அது சமயம் தமது ஆலப்பாக்கம் பகுதியில் குடிகொண்டு அருள் பாலிக்கும் அருள்மிகு ஸ்ரீ கெங்கை அம்மனுக்கு நிகழும் மங்களகரமான பராபவ வருடம் ஆவணி மாதம் 6ஆம் நாள் ஏகாதசி திதி மூலம் நட்சத்திரம், அமிர்த யோகம் கூடிய சுபயோக சுப தினத்தில் துலா லக்னத்தில் அருள்மிகு




ஸ்ரீ விநாயகர் ஸ்ரீ வள்ளி தெய்வானை சமேத சுப்பிரமணியர் ஸ்ரீ கங்கை அம்மன் ஸ்ரீ பொன்னியம்மன், ஸ்ரீ நவகிரகம் மற்றும் நூதன ராஜகோபுரம் நூதன நுழைவு வாயில் ஆகியவற்றுக்கு மஹா கும்பாபிஷேகம் வெகு சிறப்பாக நன்கொடையாளர்கள் சுமதி டில்லி பாபு , கீர்த்தனா டில்லி பாபு , தொழில் அதிபர் லயன்.ஜி.கிருஷ்ணகுமார் , கே.லாவண்யா கிருஷ்ண குமார் ஆகியோர் சிறப்பாக செய்திருந்தனர்.

அறங்காவலர் குழு மற்றும் ஆலய நிர்வாகிகளால் சிறப்பாக கும்பாபிஷேகம் நடைபெற்றது. வருகை தந்த அனைத்து பக்தர்களுக்கும் அன்னதானம் வழங்கப்பட்டது.

# இந்திய யோகா கழகத்தின் (Indian Yoga Association) இணை மையமான 'குளோபல் ஸ்கூல் ஆஃப் யோகா' சார்பில் 13-வது ஆண்டு "தமிழ்நாடு யோகா திருவிழா

சென்னை, ஆக.25-

சென்னையில் இந்திய யோகா கழகத்தின் (Indian Yoga Association) இணை மையமான 'குளோபல் ஸ்கூல் ஆஃப் யோகா' சார்பில் 13-வது ஆண்டு "தமிழ்நாடு யோகா திருவிழா 2026" ஆகஸ்ட் 23 (ஞாயிற்றுக்கிழமை) அன்று Decathlon Nolambur, Chennai வளாகத்தில் மிகப் பிரமாண்டமாக நடைபெற்றது.

நிகழ்ச்சியின் முக்கிய அம்சங்கள் உலக சாதனை முயற்சி யோக பாரம்பரியத்தில் கூறப்பட்டுள்ள 72,000 நாடிகளைப் போற்றும் வகையில், "72,000 Seconds for 72,000 Nadis" என்ற கருப்பொருளில் தொடர்ச்சியாக 72,000 வினாடிகள் யோகாசனங்கள் மேற்கொள்ளப்பட்டு, Global Book of Yoga Records அமைப்பில் புதிய உலக சாதனை படைக்கப்பட்டது.





மாநில அளவிலான யோகா சாம்பியன்ஷிப் தமிழ்நாடு முழுவதிலும் இருந்து ஏராளமான யோகா மாணவ மாணவிகள், யோகா ஆசிரியர்கள் மற்றும் பொதுமக்கள் கலந்து கொண்டு தங்களது திறமைகளை வெளிப்படுத்தினர்.

பரிசளிப்பு விழாவில் பல்வேறு போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கு கோப்பைகள், பதக்கங்கள், Grade-1 சான்றிதழ்கள் மற்றும் சிறப்பு விருதுகள் வழங்கப்பட்டன.

தேசிய மற்றும் சர்வதேச போட்டிகளுக்குத் தேர்வு இப்போட்டிகளில் சிறப்பாக செயல்பட்டு தேர்வான வெற்றியாளர்கள், அடுத்து நடைபெறவுள்ள தேசிய மற்றும் சர்வதேச அளவிலான யோகா போட்டிகளில் தமிழ்நாடு சார்பில் பங்கேற்கும் வாய்ப்பைப் பெற்றுள்ளனர் இந்நிகழ்விற்கு Universal Yoga Club மற்றும் Tamil Nadu Yoga Studios Owners Association ஆகிய அமைப்புகள் இணைந்து ஆதரவு வழங்கின.

Global School of Yoga சார்பில் நடைபெற்ற இந்த மாபெரும் யோகா திருவிழா, யோகாவின் சிறப்பு, திறமை, ஒற்றுமை மற்றும் பாரம்பரியத்தை எடுத்துக்காட்டும் வகையில் சிறப்பாக நிறைவு பெற்றது.

# வேப்பனஹள்ளி, மகாராஜகடை அருகில் காட்டு யானைகள் அட்டகாசம்; விவசாயிகள், பொதுமக்கள் அச்சம்

கிருஷ்ணகிரி, ஆக.25-

கிருஷ்ணகிரி மாவட்டம் வேப்பனஹள்ளி மற்றும் மகாராஜகடை அருகில் காட்டு யானைகள் அட்டகாசம் செய்து வருவதால் விவசாயிகள் மற்றும் பொதுமக்கள் பெரும் அச்சம் அடைந்துள்ளனர்.

கிருஷ்ணகிரி மாவட்டம் மகாராஜகடை அருகில் கடந்த சில நாட்களாக முன்பு விவசாயியை தாக்கிய காட்டு யானை தற்போது வேப்பனஹள்ளி வனப்பகுதியில் முகாமிட்டுள்ளது. ஏற்கனவே வேப்பனஹள்ளி வனப்பகுதியில் ஒற்றை கண் யானை ஒன்று உலா வரும் நிலையில் மகாராஜகடை வனப்பகுதியில் இருந்து வந்த ஒற்றை யானையும் சேர்ந்து வேப்பனஹள்ளி சுற்றுவட்டார பகுதிகளில் உள்ள விவசாய நிலங்களுக்குள் புகுந்து அட்டகாசத்தில் ஈடுபட்டு வருகிறது.



இந்நிலையில் நேற்று இரவு 2 காட்டு யானைகளும் சேர்ந்து மகாராஜகடை பகுதியில் விவசாய நிலத்தில் புகுந்து 50க்கும் மேற்பட்ட வாழை மரங்களை சேதப்படுத்தி துவசம் செய்துள்ளது. காலை தோட்டத்திற்கு வந்த விவசாயிகள் காட்டு யானை அட்டகாசத்தை கண்டு அதிர்ச்சி அடைந்துள்ளனர்.

தொடர்ந்து காட்டு யானைகள் அட்டகாசம் செய்து வருவதால் விவசாயிகள் செய்வது அறியமால் தவித்து வருகின்றனர். எனவே வனத்துறையினர் காட்டு யானைகளை கண்காணித்து நிரந்தமாக வேறு வனப்பகுதிக்கு விரட்ட வேண்டும் என விவசாயிகள், பொதுமக்கள் வலியுறுத்தி வருகின்றனர்.



■ 80ஆவது சுதந்திர தின விழாவில் தமிழ்நாடு முதலமைச்சர் சிறப்பாகச் செயல்பட்ட போடிநாயக்கனூர் நகராட்சிக்கு சிறந்த உள்ளாட்சி அமைப்புக்கான முதலமைச்சர் விருது வழங்கியதையொட்டி தேனி மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் மாவட்ட ஆட்சித்தலைவர் மரு.இரா. வைத்திநாதன், போடிநாயக்கனூர் நகர்மன்றத் தலைவர் திருமதி ராஜராஜேஸ்வரி சங்கர் மற்றும் போடிநாயக்கனூர் ஆணையாளர் செல்வி பார்கவி ஆகியோர் காண்பித்து வாழ்த்துப் பெற்றனர்.

# மானாமதுரையில் வீட்டில் கொள்ளையடிக்க முயன்ற கும்பல்

## ஒருவர் பொதுமக்களிடம் சிக்கினார்

சிவகங்கை, ஆக.25-

சிவகங்கை மாவட்டம் மானாமதுரை மாரியம்மன் கோவில் தெருவில் உள்ள ஒரு வீட்டில் கொள்ளையடிக்க முயன்றதாக கூறப்படும் 4 பேர் கொண்ட கும்பலில் ஒருவர் அப்பகுதி பொதுமக்களிடம் சிக்கினார்.



சந்தேகத்தின் அடிப்ப டையில் அவரை பிடித்த பொதுமக்கள், போலீசாரிடம் ஒப்படைத்தனர். இதையடுத்து போலீசார் அவரை அழைத்துச் சென்று விசாரணை மேற்கொண்டனர்.

மற்ற 3 பேரையும் பிடிக்க போலீசார் நடவடிக்கை மேற்கொண்டு வருகின்றனர். இதுதொடர்பான வீடியோ காட்சிகள் சமூக வலைதளங்களில் வெளியாகி பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.



■ தேனி மாவட்ட ஆட்சியர் அலுவலகக் கூட்டரங்கில் மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டம். மாவட்ட ஆட்சி த்தலைவர் மரு.இரா.வைத்திநாதன், தலைமையில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் முதியோர் உதவித்தொகை, புதிய வீட்டுமனைப் பட்டா, வேலைவாய்ப்பு மற்றும் இதர மனுக்கள் என மொத்தம் 430 கோரிக்கை மனுக்களைப் பெற்றுக்கொண்ட மாவட்ட ஆட்சித்தலைவர் , பொதுமக்களின் கோரிக்கை மனுக்களை சம்பந்தப்பட்டத்துறைஅலுவலர்களிடம் வழங்கி மனுக்கள் மீது குறித்த காலத்திற்குள் விரைந்து நடவடிக்கை மேற்கொள்ளுமாறு உத்தரவிட்டார். இக்கூட்டத்தில் மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது).இராமகிருஷ்ணன், தனித்துணை ஆட்சியர். கவிதா, உதவி ஆணையர்(கலால்) பஞ்சாபகேசன்உட்பட அரசு அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்.





■ சென்னை ஜி.என்.டி சாலை, காரனோடையில், அமைந்துள்ள அருள்மிகு ஸ்ரீ அதிசய விநாயகர் திருக்கோயில் புணராவர்த்தன அஷ்டபந்தன மஹா கும்பாபிஷேக விழா வெகு சிறப்பாக நடைபெற்றது. மங்களகரமான பராபவ ஆண்டு ஆவணி மாதம் 6ஆம் தேதி ஏகாதசி திதி மூல நட்சத்திரம் அமிர்தயோகம் கூடிய சுபயோக சுபதினத்தில் கன்னியா லக்னத்தில் ஸ்ரீ அதிசய விநாயகர் ஸ்ரீ பவானி துர்க்கை ஸ்ரீ ஆஞ்சநேயர் ஸ்ரீ பாலமுருகன் ஸ்ரீ ஐயப்பன், நவகிரகங்கள் மற்றும் பரிவார தேவதைகளுக்கு ஆகமமுறைப்படி மஹா கும்பாபிஷேகம் வெகு சிறப்பாக நடைபெற்றது. மேலும் 48 நாள் மண்டல அபிஷேகம் நடைபெறுவதால் மண்டல பூஜையில் கலந்து கொள்ளுமாறு பொதுமக்களை ஆலய நிர்வாகிகள் தலைவர் சத்யா செயலாளர் சங்கர் பொருளாளர் ஜெயச்சந்திரன் அன்புடன் அழைக்கின்றனர். மேலும் துர்கா ராமச்சந்திரன் பூமாலை மகன் ஹரிகரன் சபதி ஆலய திருப்பணிகளை சிறப்பாக செய்து இருந்தார்,

# கட்டிக்குளம் கருப்பனேந்தல் மடத்தில் மகா சித்தர் மாயாண்டி சுவாமிகள் அவதார நட்சத்திர விழா

சிவகங்கை, ஆக.25-

சிவகங்கை மாவட்டம் மானாமதுரை அருகே கட்டிக்குளம் கிராமத்தில் உள்ள கருப்பனேந்தல் மடத்தில் மகா சித்தர் மாயாண்டி சுவாமிகள் அவதரித்த பூராட நட்சத்திரத்தை முன்னிட்டு இன்று சிறப்பு அபிஷேகம் மற்றும் ஆராதனை நடைபெற்றது.



இதையொட்டி சுவாமிகளுக்கு சிறப்பு அபிஷேகம், அலங்காரம் மற்றும் பூஜைகள் நடைபெற்றன. இதில் ஏராளமான பக்தர்கள் கலந்து கொண்டு சுவாமிகளை தரிசனம் செய்து வழிபட்டனர். விழாவையொட்டி மடாலயம் முழுவதும் பக்தர்கள் கூட்டத்தால் களைகட்டியது.



■ கிருஷ்ணகிரி மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில், மாற்றுத்திறனாளிகளுக்கான சிறப்பு குறை தீர்க்கும் முகாமில், மாவட்ட ஆட்சித்தலைவர் தினேஷ் குமார் (24.08.2026) அன்று மாற்றுத்திறனாளிகளிடமிருந்து கோரிக்கை மனுக்களை பெற்றக்கொண்டார். உடன், மாற்றுத்திறனாளிகள் நல அலுவலர் முருகேசன் உள்ளிட்ட பலர் உள்ளனர்.



■ கிருஷ்ணகிரி மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் நடைபெற்ற மக்கள் குறை தீர்க்கும் நாள் கூட்டத்தில், ஏஐ (AI) தொழில்நுட்பம் மூலம் மனுக்களை ஸ்கேன் செய்து, உடனுக்குடன் கணினியில் பதிவேற்றம் செய்யும் பணிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் தினேஷ் குமார் நேற்று (24.08.2026) பார்வையிட்டார். உடன், தனித்துணை ஆட்சியர் (சமூக பாதுகாப்பு திட்டம்)அபிநயா உள்ளிட்ட பலர் உள்ளனர்.


# பத்திரம் காணவில்லை

எனது சொத்து தொடர்பான அசல் உரிமை ஆவணங்கள் பொள்ளாச்சி வட்டம், கஞ்சம்பட்டி கிராமம், MCA நகர், மனை எண் 5, S.F.No.214/1Cஆகிய சொத்து தொடர்பாக, வீடு மாற்றும் பணியின்போது 15.08.2026 அன்று தொலைந்து விட்டன.

கோமங்கலம் சார்–பதிவாளர் அலுவலகத்தில் பதிவு செய்யப்பட்ட கீழ்க்கண்ட அசல் ஆவண எண்கள்

1. விற்பனைப் பத்திரம் எண் 562/2016
2. விற்பனைப் பத்திரம் எண் 926/2013
3. விற்பனைப் பத்திரம் எண் 925/2013
4. விற்பனைப் பத்திரம் எண் 1321/2011

மேற்கண்ட அசல் ஆவணங்கள் யாருக்கேனும் கிடைத்தால் அல்லது யாரிடமாவது இருந்தால், தயவுசெய்து கீழ்க்கண்ட அலைபேசி எண்ணில் தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

தொடர்புக்கு
**பாலாஜி. ஆர்**
த/பெ. ராமராஜ்,
முகவரி: 2/432–1, MCA நகர்,
சுரபி கல்லூரி ,
கஞ்சம்பட்டி அஞ்சல்,
பொள்ளாச்சி – 642003.
செல்: 95785 09720






# திருப்பத்தூர் மாவட்டம் வாணியம்பாடியில் குடிநீரில் கழிவுநீரில் மலம் கலப்பு; பொதுமக்கள் அவதி

வாணியம்பாடி, ஆக.25-

திருப்பத்தூர் மாவட்டம் வாணியம்பாடி நகராட்சிக்கு உட்பட்ட கொல்லர் தெரு பகுதியில் கடந்த சில நாட்களாக குடிநீர் குழாயில் கழிவுநீர் மலம்கலந்து வருவதால் பொதுமக்கள் கடும் அவதிக்கு ஆளாகியுள்ளனர். கொல்லர் தெரு பகுதியில் வழங்கப்படும் குடிநீர் கருமை நிறத்தில் மலம் துர்நாற்றத்துடன் வெளியேறி வருகிறது. இதனால் குடிநீரை குடிக்க முடியாத நிலையும், அன்றாட பயன்பாட்டிற்கு பயன்படுத்த முடியாத சூழலும் ஏற்பட்டுள்ளது. இதுகுறித்து அப்பகுதி பொதுமக்கள் மற்றும் சேதுராமன் வாணியம்பாடி நகராட்சி பொறியாளர் (பொறுப்பு) நிர்வாகத்திடம் பலமுறை புகார் அளித்தும் நடவடிக்கையில் எவ்வித பயனும் இல்லை என குற்றம் சாட்டுகின்றனர். கழிவுநீர் மலம் கலந்த குடிநீரை பயன்படுத்துவதால் குழந்தைகள் முதல் பெரியவர்கள் வரை தோல் நோய், வயிற்றுப்போக்கு உள்ளிட்ட தொற்று நோய்கள் பரவும் அபாயம் உள்ளது. எனவே நோய் பரவுவதற்கு முன் நகராட்சி நிர்வாகம் உடனடியாக குடிநீர் குழாயில் ஏற்பட்டுள்ள உடைப்பை சரிசெய்து, சுத்தமான குடிநீர் வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என சமூக ஆர்வலர் சேதுராமன், மற்றும் ஊர் பொதுமக்களும் கோரிக்கை விடுத்துள்ளனர்.

# ‘தேர்தல் வழக்குகள் முடியும் வரை தமிழகத்தின் 5 தொகுதிகளுக்கு இடைத்தேர்தல் இல்லை’

சென்னை, ஆக.25-

தேர்தல் வழக்குகள் முடியும் வரை திருச்சி கிழக்கு, கரூர், விராலிமலை, பெருந்துறை, அம்பாசமுத்திரம் ஆகிய தொகுதிகளுக்கு இடைத்தேர்தல் அறிவிக்கும் திட்டம் இல்லை என சென்னை உயர் நீதிமன்றத்தில் தேர்தல் ஆணையம் தெரிவித்துள்ளது.




நடந்து முடிந்த சட்டப்பேரவைத் தேர்தலில், இரு தொகுதிகளில் போட்டியிட்ட முதல்வர் விஜய், திருச்சி கிழக்கு தொகுதியை ராஜினாமா செய்தார். அதேபோல, கரூர் தொகுதி எம்.எல்.ஏ. எம்.ஆர்.விஜயபாஸ்கர், விராலிமலை தொகுதி எம்.எல்.ஏ. சி.விஜயபாஸ்கர், பெருந்துறை எம்.எல்.ஏ. ஜெயக்குமார், அம்பாசமுத்திரம் எம்.எல்.ஏ. இசக்கி சுப்பையா ஆகியோர் ராஜினாமா செய்துள்ளனர்.

இவர்களின் வெற்றியை எதிர்த்த தேர்தல் வழக்குகள் நிலுவையில் உள்ளபோது, இந்த தொகுதிகளுக்கு இடைத்தேர்தல் அறிவிக்க தடை விதிக்கக் கோரி திருநெல்வேலி மாவட்டம், பாளையங்கோட்டையைச் சேர்ந்த வெங்கடாஜலபதி, சென்னை உயர் நீதிமன்றத்தில் பொதுநல வழக்கு தாக்கல் செய்திருந்தார்.

இந்த வழக்கை விசாரித்த உயர் நீதிமன்றம், ஐந்து தொகுதிகளுக்கும் இடைத்தேர்தல் அறிவிக்க தடை விதித்து, இந்திய தேர்தல் ஆணையம், மத்திய அரசு, சட்டப்பேரவை செயலாளர், முதல்வர் விஜய், எம்.எல்.ஏ.-க்கள் எம்.ஆர்.விஜயபாஸ்கர், சி.விஜயபாஸ்கர், ஜெயக்குமார், இசக்கி சுப்பையா உள்ளிட்டோர் மூன்று வாரங்களில் பதிலளிக்க உத்தரவிட்டிருந்தது.

இந்த தடையை நீக்கக் கோரி கரூர் முன்னாள் எம்.எல்.ஏ. எம்.ஆர். விஜயபாஸ்கர், விராலிமலை முன்னாள் எம்.எல்.ஏ. சி.விஜயபாஸ்கர் தரப்பிலும் மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டிருந்தன.

இந்த வழக்கு தலைமை நீதிபதி சுஸ்ருத் அரவிந்த் தர்மாதிகாரி மற்றும் நீதிபதி ஜி.அருள்முருகன் அமர்வு முன் இன்று மீண்டும் விசாரணைக்கு வந்தது. அப்போது, தேர்தல் ஆணையம் தரப்பில் பதில் மனு தாக்கல் செய்யப்பட்டது.

அதில், உச்ச நீதிமன்ற உத்தரவின்படி, தேர்தல் வழக்குகள் முடியும் வரை திருச்சி கிழக்கு, கரூர், விராலிமலை, பெருந்துறை, அம்பாசமுத்திரம் ஆகிய தொகுதிகளுக்கு இடைத்தேர்தல் அறிவிக்கும் திட்டம் இல்லை எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. தேர்தல் ஆணையத்தின் இந்த பதில் தவறு என முதல் விஜய் தரப்பில் எதிர்ப்பு தெரிவிக்கப்பட்டது.

தமிழக அரசுத் தரப்பில், ஐந்து தொகுதிகள் மக்கள் பிரதிநிதிகள் இல்லாத நிலை ஏற்பட்டுள்ளதால், இந்த வழக்கை விரைந்து விசாரிக்க வேண்டும் என கேட்டுக் கொள்ளப்பட்டது.

இதையடுத்து, திருச்சி கிழக்கு தொகுதி திமுக வேட்பாளர் இனிகோ இருதயராஜ் உள்ளிட்டோர் பதில் மனு தாக்கல் செய்ய உத்தரவிட்ட நீதிபதிகள், வழக்கு விசாரணையை செப்டம்பர் 8-ஆம் தேதிக்கு தள்ளிவைத்தனர். அதுவரை, ஐந்து தொகுதிகளுக்கு இடைத்தேர்தல் அறிவிக்க விதிக்கப்பட்ட தடையை நீட்டித்தும் நீதிபதிகள் உத்தரவிட்டனர்.

# மாவட்ட அளவில் தொழில் பங்கீட்டாளர்கள் தேர்வு: மதுரை மாவட்டத்தில் மதுரை, மேலூர் கோட்டங்களுக்கு விண்ணப்பிக்கலாம்

மதுரை, ஆக.25-

தமிழ்நாடு அரசு நிறுவனமான தமிழ்நாடு கண்ணாடி இழை வலையமைப்பு நிறுவனம் (TANFINET), பாரத்நெட் திட்டத்தின் கீழ் கிராமப்புறங்களில் உயர்தர இணைய சேவைகளை வழங்குவதற்காக மாவட்ட அளவிலான தொழில் பங்கீட்டாளர்களை (DLFP) தேர்வு செய்யும் பணிகளை தொடங்கியுள்ளது.

தமிழகத்தில் பாரத்நெட் பணிகள் சுமார் 96 சதவீதம் நிறைவடைந்துள்ள நிலையில், 37 மாவட்டங்களிலும் தடையில்லா இணைய சேவை வழங்க ஒவ்வொரு மாவட்டத்திலும் குறைந்தது 2 தொழில் பங்கீட்டாளர்கள் தேர்வு செய்யப்பட உள்ளனர்.

மதுரை மாவட்டத்தில் மதுரை மற்றும் மேலூர் கோட்டங்களில் தொழில் பங்கீட்டாளர்கள் தேர்வு செய்யப்பட உள்ளனர். தேர்வு செய்யப்படுவோர் Optical Fibre Cable (OFC), Optical Network Terminal (ONT) உள்ளிட்டவற்றை பராமரித்தல், இணைய சேவை தடைகளை உடனடியாக சரிசெய்தல் மற்றும் சேவை தரத்தை தொடர்ந்து பராமரித்தல் உள்ளிட்ட பணிகளை மேற்கொள்ள வேண்டும்.




# டெல்லியில் ஃபிராங்க்ஃபினுக்கு 3 விருதுகள்

புதுடெல்லி, ஆக.25-

புதுடெல்லியில் நடைபெற்ற THSC Connect 2026 மாநாட்டில், ஃபிராங்க்ஃபின் இன்ஸ்டிடியூட் ஆஃப் ஏர் ஹோஸ்டஸ் டிரெயினிங் நிறுவனத்திற்கு 3 Training Partner Awards வழங்கப்பட்டன.

Tourism and Hospitality Skill Council (THSC) சார்பில் அதிகபட்ச பயிற்சி மைய இணைப்பு, தனியார் நிதியுதவி குறுகியகாலப் பயிற்சி (STT), Training of Trainers-ல் அதிகபட்ச சேர்க்கை ஆகிய பிரிவுகளில் இந்த விருதுகள் வழங்கப்பட்டன.

'The Power of Partnerships' என்ற கருப்பொருளில் நடைபெற்ற மாநாட்டில், THSC தலைமைச் செயல் அதிகாரி ராஜன் பகதூர், ஃபிராங்க்ஃபின் குழும தலைமை செயல்பாட்டு அதிகாரி சுதீர் மல்ஹோத்ராவிடம் விருதுகளை வழங்கினார்.

1993-ம் ஆண்டு தொடங்கப்பட்ட ஃபிராங்க்ஃபின், இதற்கு முன்பு 5 முறை THSC-ன் Best Training Partner Award-ஐ பெற்றுள்ளது. 2022-23-ம் ஆண்டில் ஒரே ஆண்டில் 3 விருதுகளை பெற்ற நிலையில், தற்போது 2026-லும் அதே சாதனையை மீண்டும் நிகழ்த்தியுள்ளது.

விருதுகள் குறித்து சுதீர் மல்ஹோத்ரா கூறுகையில், "இந்த 3 விருதுகளும் ஃபிராங்க்ஃபின் குடும்பத்திற்கு பெருமைமிகு தருணம். நாடு முழுவதும், குறிப்பாக சிறிய நகரங்கள் மற்றும் ஊர்களில் உள்ள மாணவர்களுக்கு உலகத் தரமான விமானப் போக்குவரத்து மற்றும் விருந்தோம்பல் பயிற்சியை வழங்குவதற்கான எங்களது அர்ப்பணிப்பை இந்த விருதுகள் உறுதிப்படுத்துகின்றன" என்றார்.

# மாவட்ட வழங்கல் மற்றும் விற்பனை சங்கம் மேலாளர் பணிக்கு விண்ணப்பங்கள் வரவேற்பு

தேனி, ஆக.25-

தேனி மாவட்ட ஆட்சித்தலைவர் மரு.இரா.வைத்திநாதன், செய்திக்குறிப்பில் தெரிவித்துள்ளதாவது, தேனி மாவட்டம், தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம், மாவட்ட இயக்க மேலாண்மை அலகில் காலியாக உள்ள மாவட்ட வழங்கல் மற்றும் விற்பனை சங்கம் மேலாளர் (விற்பனை) பணிக்கு முற்றிலும் தற்காலிகமாக தொகுப்பூதியம் அடிப்படையில் பணிபுரிய தகுதியுடைய விண்ணப்பதாரர்களிடமிருந்து மட்டும் விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன.



மாவட்டவழங்கல் மற்றும் விற்பனை சங்கம்மேலாளர் (விற்பனை) பணிக்கு விண்ணப்பிக்க கல்வித்தகுதிகள் கல்வியில் எம்.பி.ஏ., பட்டம் பெற்றிருக்க வேண்டும். வயது வரம்பு 40 வயதுக்குள் இருக்கவேண்டும். வாழ்வாதார திட்டங்களில் குறைந்தது 5 வருடங்கள் முன் அனுபவம் பெற்றிருக்க வேண்டும். தகுதியான விண்ணப்பதாரர்கள்விண்ணப்பங்களை நேரில் மகளிர் சுய உதவிக் குழுக்கட்டடம், அரண்மனைப்புதூர் வழி, (முல்லைநகர், தேனி என்ற முகவரியில் வருகின்ற 31.08.2026 மாலை 5.30 மணிக்குள் சமர்ப்பிக்க வேண்டும். இதற்கு பின்னர் வரும் விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ள இயலாது. மேலும், இது தொடர்பான கூடுதல் விபரங்களுக்கு மாவட்ட மகமை அலுவலகத்தில் பணிநாட்களில் மட்டும் மாலை 6.00 மணிக்குள் நேரில் வந்து விபரம் பெற்றிடலாம் என மாவட்ட ஆட்சித்தலைவர் மரு.இரா.வைத்திநாதன், தெரிவித்துள்ளார்.

# ஆக.31 வரை புதுச்சேரி சட்டப்பேரவைக் கூட்டம்: தற்காலிக தலைவர் அறிவிப்பு

புதுச்சேரி, ஆக.25-

புதுச்சேரி பட்ஜெட் கூட்டத்தொடர் நேற்று துணைநிலை ஆளுநர் உரையுடன் தொடங்கியது. மதியம் முதல்வர் ரங்கசாமி 2026- 27ம் நிதியாண்டுக்கான பட்ஜெட்டை தாக்கல் செய்தார்.



இதற்கிடையே பட்ஜெட் கூட்டத்தொடரை எத்தனை நாட்கள் நடத்துவது என்பது குறித்து முடிவு செய்வதற்காக, சட்டப்பேரவை அலுவல் ஆய்வுக்குழு கூட்டம் இன்று நடைபெற்றது.

பின்னர் சட்டப்பேரவையின் தற்காலிக தலைவர் அன்பழகன் செய்தியாளர்களிடம் கூறியது: "வருகிற 31-ம் தேதி வரை சட்டப்பேரவை கூட்டத்தை நடத்துவது என்று அலுவல் ஆய்வுக்குழு கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டுள்ளது.

இதன்படி இன்று (ஆக. 25) மற்றும் வரும் 27, 28, 29 ஆகிய நாட்களில் துணைநிலை ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானம், பட்ஜெட் மீதான விவாதம், பொது விவாதம், முதல்வர், அமைச்சர்கள் பதில் உள்ளிட்டவை இந்த 6 நாட்களில் இருக்கும். 26-ம் தேதி (புதன்கிழமை) அரசு விடுமுறை தினம் என்பதால் அமர்வு கிடையாது.

30-ம் தேதி (ஞாயிற்றுக்கிழமை) அமர்வு இல்லை. 31-ம் தேதி நிதி ஒதுக்க சட்ட முன்வரைவு (முன்மொழிதல், ஆய்வு செய்தல் மற்றும் நிறைவேற்றுதல் நடைபெறும். இந்த நாட்களில் கேள்வி - பதில் இல்லை. 31-ம் தேதிக்கு பிறகு 12 நாட்கள் கழித்து கேள்வி - பதில்களுடன் மீண்டும் சட்டப்பேரவை கூட்டத்தொடர் நடத்தப்படும்.

இந்த கூட்டத்தொடர் ஜனநாயகத்தின் அடிப்படையில் விரிவாக நடத்தப்படும். புதிய உறுப்பினர்கள் பலர் தேர்வு செய்யப்பட்டுள்ளதால், அவர்களுக்கு பேச்சுரிமை அளிக்கும் வகையில் இந்த கூட்டத்தொடர் அமையும்" என்று தெரிவித்தார்.

அப்போது செய்தியாளர்கள், 'திமுக எம்எல்ஏ கார்த்திகேயன் மேகேதாட்டு அணை விவகாரம் தொடர்பாக தனி தீர்மானம் நிறைவேற்ற வேண்டும் என்று மனு அளித்துள்ளார். அது தீர்மானமாக நிறைவேற்றப்படுமா?' என்று கேட்டபோது, அதற்கு பேரவையின் தற்காலிகத் தலைவர், "முதல்வரின் கருத்தை அறிந்தபிறகே பதில் கூறப்படும்" என்று தெரிவித்தார்.

# "பரந்தூர் திட்டம் ரத்தால் தமிழக வளர்ச்சி 10 ஆண்டுகள் தாமதிக்கும் அபாயம்..." - அண்ணாமலை

சென்னை, ஆக.25-

பரந்தூர் இரண்டாவது விமான நிலையத் திட்டம் கைவிடப்பட்டதால் தமிழகத்தின் வளர்ச்சி குறைந்தது 10 ஆண்டுகள் பின்னுக்குத் தள்ளப்படும் என்றும், புதிய இடத்தை தமிழக அரசு உடனடியாக அறிவிக்க வேண்டும் என்று விகி லீடர்ஸ் அமைப்பின் நிறுவனர் அண்ணாமலை தெரிவித்துள்ளார்.



இது குறித்து அவர் தனது எக்ஸ் தள பதிவில், "இன்றைய தினம் சட்டப்பேரவையில், தமிழக முதல்வர் விஜய், பரந்தூர் விமான நிலையத் திட்டத்தை தமிழக அரசு கைவிட முடிவு செய்துள்ளதாக அறிவித்துள்ளார். சென்னையின் இரண்டாவது விமான நிலையத்துக்காக வேறு சில இடங்கள் பரிசீலனையில் இருப்பதாகவும் தெரிவித்துள்ளார்.

ஆனால், புதிய இடம் எது என்பதையும் முதல்வர் அறிவித்திருந்தால் சிறப்பாக இருந்திருக்கும். ஏனெனில், இரண்டாவது விமான நிலையத்திற்கான இடத்தைத் தேர்வு செய்யத் தாமதப்படுத்துவதால், தமிழகத்தின் வளர்ச்சி குறைந்தது 10 ஆண்டுகள் தாமதிக்கும் அபாயம் உள்ளது.

பரந்தூர் திட்டத்துக்கு மாற்றாக வேறு இடத்தில் இரண்டாவது விமான நிலையத்தை அமைக்க தமிழக அரசு நிர்வாக ரீதியாக முடிவெடுத்தாலும், புதிய இடத்தைத் தேர்வு செய்வது, மத்திய அரசு மற்றும் சம்பந்தப்பட்ட சட்டப்பூர்வமான அனுமதிகளைப் பெறுவது, ஒப்பந்தப்புள்ளிகள் கோருவது, நிலம் கையகப்படுத்துவது, தேவையான உரிமங்கள் பெறுவது என, விமான நிலையம் செயல்பாட்டுக்கு வர குறைந்தது 10 ஆண்டுகள் ஆகலாம். அதற்குள் மற்ற மாநிலங்கள் வேகமாக முன்னேறிக் கொண்டிருக்கும் நிலையில், தமிழகம் பின்னுக்குத் தள்ளப்படும்.

இன்றைய தேவைக்கே சென்னை விமான நிலையம் போதுமானதாக இல்லை என்பதை முதலில் நாம் ஒப்புக்கொள்ள வேண்டும். சென்னை விமான நிலையத்தின் பரப்பளவு சுமார் 1,300 ஏக்கர். ஆனால், ஹைதராபாத் விமான நிலையம் சுமார் 5,500 ஏக்கர், பெங்களூரு விமான நிலையம் 4,000 ஏக்கர், நவி மும்பை விமான நிலையம் 2,866 ஏக்கர், டெல்லி விமான நிலையம் 5,100 ஏக்கர் பரப்பளவில் அமைந்துள்ளன.

இவ்வளவு குறைந்த பரப்பளவில் இயங்கும் சென்னை விமான நிலையம், குறைந்தபட்சம் பயணிகளுக்கு சிறந்த சேவையை வழங்க வேண்டும். ஆனால், விமான நிலையத்தில் தரையிறங்கும் பகுதியில் இருந்து வெளியே வந்து, உள்ளூர் போக்குவரத்தை அடைவதற்கே பயணிகள் இன்று பெரும் சிரமத்தை எதிர்கொள்கிறார்கள்.

ஒரு காலத்தில் தென்னிந்தியாவின் நுழைவாயிலாக இருந்த சென்னை, இன்று விமானப் பயணிகள் கையாளும் திறனில் 5-வது இடத்தில் உள்ளது. ஆண்டுக்கு சுமார் 3 கோடி பயணிகளை கையாளும் திறன் கொண்ட சென்னை விமான நிலையத்தை விட டெல்லி, மும்பை, பெங்களூரு, ஹைதராபாத் விமான நிலையங்கள் முன்னிலையில் உள்ளன.

மேலும், சென்னை விமான நிலையத்தில் போதுமான டாக்ஸிவேக்கள் மற்றும் ஏர்பிரிட்ஜ்கள் இல்லாத காரணத்தால், பெரிய விமானங்களைக் கையாளும் திறன் கொண்ட Code F விமான நிலையமாக சென்னை விமான நிலையம் வகைப்படுத்தப்படவில்லை. இதனால் A380 போன்ற மிகப்பெரிய விமானங்கள் தரையிறங்க, சென்னை விமான நிலையம் தயாராக இல்லை. தென்னிந்தியாவில் பெங்களூரு மற்றும் ஹைதராபாத் விமான நிலையங்கள் பெரிய விமானங்களை கையாளும் Code F விமான நிலையங்களாக உள்ளன என்பது குறிப்பிடத்தக்கது.

கட்சிகள் வரலாம், போகலாம். ஆட்சிகள் மாறலாம். ஆனால் இன்னும் 20 ஆண்டுகளுக்குப் பிறகு தமிழக மக்கள் திரும்பிப் பார்க்கும்போது, தொலைநோக்குப் பார்வையற்ற நிர்வாகத்தின் காரணமாக, ஒரு தரமற்ற கட்டிடத்தை விமான நிலையம் என்று அழைக்கும் நிலையில் சிக்கிக் கொண்டிருக்கிறோம் என்று வருந்தக்கூடாது.

எனவே, தமிழக அரசு இனியும் தாமதிக்காமல், சென்னையின் இரண்டாவது விமான நிலையத்திற்கான பொருத்தமான இடத்தை உடனடியாகத் தேர்வு செய்து, விமான நிலையம் அமைக்கும் திட்டத்தை விரைவுபடுத்த வேண்டும்.

மேலும், இந்த ஆண்டு மார்ச் மாதத்தில் வெளியான செய்திகளின்படி, பரந்தூர் விமான நிலையத்திற்குத் தேவையான 5,746 ஏக்கரில் சுமார் 1,700 ஏக்கர் நிலத்தை தமிழக அரசு ஏற்கெனவே கையகப்படுத்தியிருந்ததாகத் தெரிவிக்கப்பட்டது. பரந்தூர் திட்டம் தற்போது கைவிடப்பட்டுள்ள நிலையில், அந்த 1,700 ஏக்கர் நிலத்தை தமிழக அரசு இனி என்ன செய்யப் போகிறது? இதற்கான தெளிவான பதிலையும் தவெக அரசு, மக்களுக்கு தெரிவிக்க வேண்டும்" என்று அவர் பதிவிட்டுள்ளார்.

# “பரந்தூர் திட்டத்தை நிறுத்துவதால் தொழில் நிறுவனங்கள் அண்டை மாநிலங்களை நோக்கி வெளியேறும்”

சென்னை, ஆக.25-

'அற்ப அரசியல் காரணங்களுக்காக பரந்தூர் விமான நிலையத் திட்டத்தை கைவிட்டால் சென்னையை சுற்றியுள்ள தொழில் நிறுவனங்கள் அண்டை மாநிலங்களை நோக்கி வெளியேறும் அபாயமும், புதிய நிறுவனங்கள் சென்னைக்கு வர தயங்கும் சூழலும் எழும்' என சட்டப்பேரவை எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் தெரிவித்தார்.



இது குறித்து அவர் வெளியிட்ட எக்ஸ் பதிவில், 'தமிழகத்தின் வளர்ச்சிக்கான பரந்தூர் விமான நிலையத் திட்டத்தை ரத்து செய்திருக்கும் சோஃபா மாடல் அரசை வன்மையாகக் கண்டிக்கிறேன்.

சென்னையில் பெருகி வரும் விமானப் பயணிகளின் எண்ணிக்கை மற்றும் விமான சரக்கு போக்குவரத்து - எதிர்காலத் தேவை போன்றவற்றின் அடிப்படையில், சென்னைக்கு 2-ஆவது விமான நிலையம் அவசியம் என்பதை உணர்ந்து, பரந்தூர் விமான நிலையத் திட்டம் திமுக அரசால் உருவாக்கப்பட்டது.

இந்தத் திட்டத்துக்கு இந்திய விமான நிலைய ஆணையம், மத்திய சிவில் விமானப் போக்குவரத்து அமைச்சகம் உள்ளிட்டவை ஆய்வு செய்து, அனுமதி தந்துவிட்டன. இத்தகைய கடினமான அனுமதிகளைப் பெறுவது, கையகப்படுத்தப்பட்ட நிலங்களுக்குச் சந்தை மதிப்பை விட 3 மடங்கு அதிகமான இழப்பீடு, மறு குடியமர்வு போன்ற முக்கியமான பணிகள் அனைத்தும் ஸ்டாலின் முதல்வராக இருந்த போதே நடைபெற்றன.

இதற்காக அரசுத் தரப்பில் பெரும் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது. இவையெல்லாம் நடந்த பிறகு, அற்ப அரசியல் காரணங்களுக்காக திட்டத்தை கைவிடுகிறேன் என்று சொன்னால், அது அரசுக்குப் பெரும் நிதி இழப்பை ஏற்படுத்தும்.

பரந்தூர் விமான நிலையத் திட்டத்தை நிறுத்துவதால், சென்னையை சுற்றியுள்ள தொழில் நிறுவனங்கள் அண்டை மாநிலங்களை நோக்கி வெளியேறும் அபாயமும், புதிய நிறுவனங்கள் சென்னைக்கு வர தயங்கும் சூழலும் எழுந்துள்ளன.

ஆகவே, தமிழக இளைஞர்களின் எதிர்கால நலனையும், தமிழக வளர்ச்சியையும் கருத்தில் கொண்டு, பரந்தூர் விமான நிலைய பணிகளைத் தொடர அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்' எனத் தெரிவித்துள்ளார்.

# தமிழ்நாட்டின் பொருளாதாரம், தொழில் வளர்ச்சி தொடர உள்கட்டமைப்புகள் அவசியம்: டி.ஆர்.பி.ராஜா

சென்னை, ஆக.25-

தமிழ்நாட்டின் பொருளாதாரம், தொழில் வளர்ச்சி தொடர உள்கட்டமைப்புகள் அவசியம். இதுவரை இந்தியாவில் எந்த மாநிலமும் காணாத தொழில் வளர்ச்சியை தமிழ்நாடு கண்டுள்ளது என்று முன்னாள் அமைச்சர் டி.ஆர்.பி.ராஜா தெரிவித்துள்ளார்.



தமிழ்நாட்டின் தொழில் வளர்ச்சிக்கும், உட்கட்டமைப்பிற்கும் இன்று மிகப்பெரிய கருப்பு நாள். தமிழ்நாட்டின் ஒட்டுமொத்த தொழில் வளர்ச்சிக்கும் மிகப்பெரிய அடி விழுந்துள்ளது. பரந்தூரில் புதிய விமான நிலையம் வந்திருந்தால் அது தமிழ்நாட்டின் சொத்தாக இருந்திருக்கும் என்று அவர் கூறியுள்ளார்.

Printed by A.PONRAJ, published ,owned by A.PONRAJ and printed at “SRI SAAI PRINTERS”No.122,Neethipathi, Rajasekaran Street,vaarasanthai road,Sivaganga and published at 6 a, madurai road Sivaganga, Sivaganga district,Editor A.PONRAJ. Ph: 8508502161